தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 10, திருவள்ளுவர் ஆண்டு—2044

2013 ஏப்ரல் 23, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி."

கொடுக்கும் பண்பு, முகம் மலர்ந்து பேசல், நீதி தவறாத ஆட்சி, குடிமக்களைக் காத்தல் ஆகிய நான்கும் கொண்ட அரசர், மற்ற அரசர்களுக்கெல்லாம் ஒளி விளக்குப் போன்றவர் ஆவார்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண்கள் 297, 298 மற்றும் 299 ஆகியவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 300, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

300—

மேம்பாலம்

***3903—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 ஏப்ரல் 23

(அ) சென்னை-ஸ்ரீபெரும்புதூர் தேசிய நெடுஞ்சாலையில் ஹுண்டாய் மோட்டார் வாகன நிறுவனம் அருகிலுள்ள சிப்காட் பகுதியில் புதிய மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஹுண்டாய் மோட்டார் வாகன நிறுவனம் அருகிலுள்ள சிப்காட் பகுதிக்குத் திரும்பும் இடத்தில் மேம்பாலம் அமைப்பதற்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகனப் பெருக்கத்தின் காரணமாகவும், மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாகவும் தமிழகத்தினுடைய மேற்கு மாவட்டங்களுக்குச் செல்லக்கூடிய மிகப் பிரதான சாலை சென்னை-பெங்களூரு நெடுஞ்சாலை. அந்தச் சாலையிலே ஹுண்டாய் கம்பெனிக்கு அருகிலேயும், சிப்காட் தொழிற் பூங்காவிற்கு அருகிலேயும், வல்லக்கோட்டை செல்லக்கூடிய இணைப்புச் சாலைக்கு அருகிலேயும், காஞ்சிபுரத்திற்குச் செல்லக்கூடிய இணைப்புச் சாலைக்கு அருகிலேயும், அதிக எண்ணிக்கையில் வாகனங்கள் வந்து செல்வதால், காலை மற்றும் மாலை வேளைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. எனவே, அந்த இடத்திலே பயணிகளுடைய சிரமத்தைப் போக்குகின்ற விதத்திலே, உடனடியாக மேம்பாலம் அமைக்க வேண்டும் என்று, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, 2007 ஏப்ரல் 14 ஆம் தேதி, திருவான்மியூர் சிக்னலிலே மேம்பாலம் அமைக்கப்படும் என்ற ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். ஆனால், அதற்காக ஒரு செங்கல்லைக்கூட எடுத்து வைக்கவில்லை. எனவே, சென்னை மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கக்கூடிய, திருவான்மியூர் சிக்னல் சந்திப்பு, டைடல் பார்க் சந்திப்பு, எஸ்.ஆர்.பி. டூல்ஸ், போரூர் சிக்னல் போன்ற பகுதிகளிலே மேம்பாலம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

2013 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து ஸ்ரீபெரும்புதூர் வழியாக பெங்களூரு செல்லும் தேசிய நெடுஞ்சாலை எண் 4, தற்போது நான்கு வழிச் சாலையாக உள்ளது. இதனை 6 வழிச் சாலையாக அகலப்படுத்தும்போது கி.மீ.30/0.5.0-ல், ஹுண்டாய் மோட்டார் வாகன நிறுவனம் அருகில் உள்ள சிப்காட் பகுதிக்குத் திரும்பும் இடத்தில் மேம்பாலம் அமைப்பதற்கு, தனியார் நிறுவனம் மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கும் இடையே சலுகை உடன்படிக்கை 4-6-2012 அன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன என இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தெரிவித்துள்ளதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு இடங்களைக் குறிப்பிட்டு, அங்கெல்லாம் மேம்பாலம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். திருப்பதி செல்லும் சாலையில் ஹுண்டாய் மோட்டார் இருக்கின்ற இடம், அதேபோல ஸ்ரீபெரும்புதூர், சிப்காட், சுங்குவார்சத்திரம், காஞ்சிபுரம் புறவழிச் சாலை தொடங்கும் இடம், கோச்சேரி ஆகிய இடங்களிலே மேம்பாலங்கள் அமைக்கப்பட இருப்பதாக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தெரிவித்துள்ளதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்குள் நுழைந்தபோது, உறுப்பினர்கள் மேசையைத் தட்டி பலத்த ஒலி எழுப்பினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

முற்பகல் 10-05

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு ஆய்வுகளுக்குப் பிறகு, ஏறத்தாழ 1,800 கோடி ரூபாய் செலவிலே மத்திய அரசால் எண்ணூர் துறைமுகத்திலிருந்து மதுரவாயல் வரையிலே போடப்படுகின்ற உயர்மட்ட மேம்பாலம், சுற்றுப்புறச் சூழல் காரணத்திற்காகவும், கூவத்தினுடைய

பழமையைக் கெடுக்கின்ற வகையில் அமைக்கப்பட்டிருக்கின்ற தூண்கள் பொது மக்களுக்கு இடையூறாக இருக்கின்ற காரணத்திற்காகவும் அந்த மேம்பாலத்தின் கட்டுமானப் பணி தற்போது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. கட்டுமானப் பணியைக் காரணம் காட்டி கடந்த ஆட்சியிலே, கூவக்கரையோரம் இருந்த பொது மக்களை அப்புறப்படுத்தியிருக்கின்றார்கள். அவர்களை அப்புறப்படுத்தியதற்கான நியாயமான காரணம், அதுவல்ல. எனவே, மீண்டும் கட்டுமானப் பணியைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், சென்னை துறைமுகம் முதல் மதுரவாயல் வரை உயர் மட்ட சாலையினை கூவம் ஆற்றின் கரையோரமாக அமைப்பதற்கு அரசு ஆணை (நிலை) எண் 199, பொதுப் பணித் துறை, நாள் 26-2-2007-ல் கொள்கையளவிலே ஒப்புதல் தந்துள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியுள்ள அந்தப் பாலம் தொடர்பான வழக்கு, தற்போது உயர் நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தாலே, இங்கே விவாதிப்பது சரியில்லையென்று கருதுகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுதொடர்பான கேள்வியைத் தவிர்க்க வேண்டுமாய் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 301, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

301—

கால்வாய்த் திட்டம்

***24598—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் வட்டம், மதிகெட்டான் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?